தமிழ்நாட்டு மக்களுடைய உரிமைகள் – மாநில சுயாட்சியில் என்றைக்குமே அக்கறையற்றவர்கள் அ.தி.மு.க.வினர்!

பொய்யான காரணங்களைச் சொல்லி - புதிய எஜமானர்கள் கட்டளைப்படி பேரவையிலிருந்து வெளிநடப்பு!

தலைமைச் செயலகத்தில் – அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

சென்னை, ஏப்.17 -

சட்டப்பேரவையிலிருந்து அ.தி.மு.க.வினர் வெளிநடப்புச் செய்ததையடுத்து, தலைமைச் செயலக வளாகத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி "பொய்யான காரணங்களைச் சொல்லி - புதிய எஜமானர்கள் கட்டளைப்படி பேரவையிலிருந்து அ.தி.மு.க.வினர் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

சட்டத்துறை அமைச்சர் ரகுபதி நேற்று முன்தினம் (15.04.2025) சட்டப் பேரவைக்கு வெளியே செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

மாநில அரசுகளின் உரிமைகளை எல்லாம் மீட்டெடு க்கின்ற வண்ணம் ஒன்றிய மாநில அரசினுடைய உரிமைகளை எந்தெந்த உரிமைகளை மாநில அரசு இன்றைக்குப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை எல்லாம் ஏற்கனவே பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு ஆராய்ந்து இருந்தாலும், இன்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் ஒரு புதிய கமிட்டியை நிர்ணயித்தி ருக்கிறார்கள்.

ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஜோசப் மரியாதைக்குரிய திரு.அசோக் வர்தன் செட்டி, மரியாதைக்குரிய திரு.நாகநாதன் ஆகியோர் கொண்ட குழு, நம்முடைய ஒன்றிய அரசு, மாநில அரசுக்கான உரிமைகளைப் பற்றியும் நாம் எந்தெந்த விதங்க ளில் எல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கிறோமோ, அந்த பாதிப்புகளை எடுத்துக் கூறுகின்ற வண்ணம் இந்தக் கமிட்டி பரிசீலிக்கும்.

ஏற்கனவே, ராஜமன்னார் கமிட்டி பல்வேறு பரிந்துரைகளைத் தந்திருக்கிறது. அதனடிப்படையில், தமிழ்நாடு அரசு பல்வேறு கோரிக்கைகளைச் சொல்லி இருந்தாலும் கூட ஒன்றிய அரசு அதற்காக பூஜ் கமிட்டி, சர்க்காரியா கமிஷன் போன்றவற்றையெல்லாம் அமைத்திருந்தார்கள். ஆனால், இந்தக் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, நம்முடைய மாநில உரிமைகள் மீட்டெடுக்கப்படவில்லை. இன்றைக்கு கல்வியிலே நம்முடைய உரிமைகள் concurrence list-ல் இருக்கின்ற காரணத்தால், நம்மை அவர்கள் கலந்தாலோசித்துச் செய்ய வேண்டிய, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் கூட இன்றைக்கு அவர்கள் எடுக்கவில்லை. கல்விக் குரிய தொகையை நாம் மும்மொழித் திட்டத்தை அறிமுகப்படுத்த முடியாது என்று சொன்னதால், நமக்கு தரவேண்டிய தொகையை இன்றைக்கு ஒன்றிய அரசு தர மறுக்கின்றது. 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தில், ஒரு 3, 4 மாதங்களுக்கான அந்தத் தொகை 100 நாள் வேலை வாய்ப்பு பணியாளர்களுக்கு தரப்படாமல் இருக்கிறது.

அதேபோல, நாம் கொடுக்கின்ற அந்த ஒன்றிய அரசுக்கான அந்த ஜி.எஸ்.டி. நிதிப் பகிர்வு என்பது 29 பைசாவாகவே இருக்கிறது. இன்றைக்கு பீஹாருக்கோ, உத்தரப்பிரதேசத்திற்கோ நீங்கள் 1 ரூபாய் வரிக்கு எந்த அளவுக்கு அதிகமாக கொடுக்கிறீர்களோ, எங்களுக்கு அந்த அளவுக்கு வேண்டாம் - நாங்கள் ஒரு ரூபாய் கொடுக்கின்ற பொழுது, எங்களுக்கு 50 பைசாவையாவது திருப்பித் தாருங்கள் என்பது தான் நம்முடைய கோரிக்கை.

அதேபோல இன்றைக்கு சட்டமன்றத்தில், பாரதிய ஜனதா கட்சியின் தலைவராக பொறுப்பேற்று இருக்கக்கூடிய நயினார் நாகேந்திரன் அவர்கள் 29 பைசா தருவதையே பெருமையாகச் சொன்னார். ஆனால், அவர் பீகாருக்கும், உத்திரப் பிரதேசத்திற்கும் என்ன கொடுக்கிறோம் என்பதை அவர் சொல்ல தவறிவிட்டார். எனவே, எந்தெந்த வகையில் நாம் வஞ்சிக்கப்பட்டி ருக்குமோ அதிலிருந்து மீட்டெடுப்பதற்காகவும், நம்முடைய உரிமைகள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், முதலமைச்சர் அவர்கள் இந்த கமிட்டியை இன்றைக்கு நியமித்திருக்கி றார்கள். அதனுடைய பரிந்துரைகளின் அடிப்படையில் நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, நம்முடைய மாநில உரிமைகளை மீட்டெடுக்க கடமைப்பட்டிருக்கின்றோம்.

பிரதான எதிர்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் வழக்கம்போல வெளிநடப்புச் செய்துவிட்டார்கள். தமிழ்நாடு மக்களுடைய உரிமைகளில், மாநில சுயாட்சியில், மாநிலத்திற்கான அதிகாரங்கள் நாம் பெறுவதில் அவர்களுக்கு என்றைக்குமே அக்கறையில்லை. புதிய எஜமானர்களின் கட்டளைப்படி இன்றைக்கு அவர்கள் வெளிநடப்பு செய்து இருக்கிறார்கள். அதற்கான பொய்யான காரணங்களை அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். எல்லோருக்கும் அந்த 110 விதி முடிந்த பிறகு பேச வாய்ப்பு தருகிறேன் என்று சட்டப் பேரவைத் தலைவர் சொன்ன பிறகும்கூட - எங்கள் கோரிக்கையை நீங்கள் முதலில் கேட்க வேண்டும் அப்போதுதான் முதலமைச்சர் 110 விதியின் கீழ் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று சொல்லி சத்தம் போட்டு விட்டு, வெளிநடப்புப் செய்திருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது - இன்றைக்கு மாநில சுயாட்சி மாநிலத்தில் உரிமைகளைக் காப்பதற்காக தீர்மானம் கொண்டு வரப் போகிறோம் என்பது. எனவேதான், தெரிந்தே இன்றைக்கு அவர்கள் வெளிநடப்புச் செய்து இருக்கிறார்கள்.

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கான, ஒன்றிய, நகர, பேரூர் பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் கூட்டத்தில் அமைச்சர் சி.வெ. கணேசன் கலந்து கொண்டு நேர்காணல் நடத்தினார். சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ., கழக பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன், துணை செயலாளர் பிரதீப், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பாண்டுரங்கன், செந்தில்நாதன், செம்பையன், நிரஞ்சன், இராம் சிங் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொறியாளர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் கே.என்.நேரு தலைமை! தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி சார்பில்

முதலமைச்சர் - கழகத் தலைவர் பிறந்தநாள் விழா கருத்தரங்கம் - கவியரங்கம்!

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - கே.ஆர்.பெரியகருப்பன் - கோவி.செழியன் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் வாழ்த்துரை! த.சந்திரசேகரன் ஏற்பாடு!

புதுக்கோட்டை, ஏப்.17

தி.மு.க. விவசாய தொழிலாளர் அணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பு வாழ்த்தரங்கம், கருத்தரங்கம் வருகின்ற 20 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணி அளவில் புதுக்கோட்டை நகர் மன்றத்தில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெறுகிறது.

பி.என்.பி.இன்பசேகரன், கே.ஆர்.என.போஸ், சா. ராஜசேகரன் ஆகியோர் பொன்னாடை மாலை அணிவிக்கின்றனர். விவசாயத் தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றுகிறார். புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வாழ்த்துரை வழங்குகிறார்.

முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் சி.ஆர்.ராமச்சந்திரன் ஜெகவீரபாண்டியன் ஆகியோர் பொன்னாடை மாலை அணிவிக்கின்றனர். கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வ.அன்பழகன், பா. அருண் குமார், கொடி. சந்திரசேகர், எஸ்.சேதுராமன் ஆகியோர் பொன்னாடை, மாலை அணிவிக்கின்றனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., மேயர் திலகவதி செந்தில், ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். வ.து.ந. ஆனந்தன், கே. கணேஷ்குமார் ஆதித்தன் ஆகியோர் பொன்னாடை மாலை அணிவிக்கின்றனர். பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் குத்து விளக்கு ஏற்றி விழா தொடக்க உரையாற்றுகிறார். ர.முத்து குமாரசாமி, கு.த.முத்து ஆகியோர் மாலை அணிவிக்கின்றனர்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியில் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. திருச்சி தெற்கு மாவட்ட செயலாளரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசுகிறார். முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் வாழ்த்து கவிச்சரம் வழங்குகிறார். கருத்தரங்கத்திற்கு கவியருவி பேராசிரியர் அப்துல் காதர் தலைமை வகித்து தமிழர் எழுச்சி என்ற தலைப்பில் பேசுகிறார்.

மாமன்ற உறுப்பினர் செந்தாமரை பாலு பொன்னாடை, மாலை அணிவிக்கிறார். நற்றமிழ் நாவலர் மருத்துவர் ஜெய ராஜ மூர்த்தி, ஏழைகள் மகிழ்ச்சி என்கிற தலைப்பில் பேசுகிறார். பி. பாக்கியநாதன் மாலை, பொன்னாடை அணிவிக்கிறார்.

கவிஞர் நா.முத்து நிலவன் கல்வியில் மறுமலர்ச்சி என்ற தலைப்பில் பேசுகிறார். இரசங்கர் பொன்னாடை, மாலை அணிவிக்கிறார். விவசாயத் தொழிலாளர் அணி தலைவர் உ. மதிவாணன் நன்றி உரையாற்றுகிறார்.

மாவட்ட அமைப்பாளர்கள் சி.அரங்கநாயகம், செவலூர் ராமலிங்கம் ஆகியோர் உபசரிக்கின்றனர். வாழ்த்தரங்கில் அறந்தாங்கி ராஜன முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் பெரியண்ணன் அரசு, காசி. முத்து மாணிக்கம், புதுக்கோட்டை விஜயா, மிசா சி.ராமநாதன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், பி.டி.அரசகுமார், சுப. சரவணன், செ.அசோக் பாண்டியன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, வி. என்.மணி, பரணி இ.ஏ.கார்த்திகேயன், சு.சண்முகம், கீரை.தமிழ் ராஜா, அரு.வீரமணி, எஸ்.எஸ். கருப்பையா, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, தென்னலூர் எம். பழனியப்பன், என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், எம்.செந்தில் குமார், ஆர். செல்லத்துரை, சி.ஆர்.வி. சித்ரா, எஸ்.திருஞான சம்பந்தம், க.நைனா முகமது, எம்.எம்.பாலு, மு.கலியமூர்த்தி, வை.கோ.ராஜன், க.ரெங்கராஜ், மு.பி.மணி, மு.க.ராமகிருஷ்ணன், ஆர். ஆர்.சாமிநாதன், தவ. பாஞ்சாலன், வெ.முத்துகிருஷ்ணன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, என்.சேட்டு, சி. சண்முகம், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், மு.பி.ம.சத்திய சீலன், கே.பி.அய்யப்பன், அ.இளங்கும ரன், கே.எஸ். சந்திரன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து,

வே.ராஜேஷ், உ. முருகேசன், பி.அண்ணாதுரை, வை. விஜயகுமார், எம்.எஸ்.ஏ. முகமது ரிஷா, உரக்கடை எம்.கருப்பையா, மஜித் முபாரக், டாக்டர் மு.க. முத்து கருப்பன், புத்தரம்பூர் எம். சுப்பையா, டி.எம்.ஆர். ராமமூர்த்தி, முனைவர் குறிஞ்சிவாணன், பொன். பாரிவள்ளல், வழக்கறிஞர் ஏ.வீரய்யா, கே.எஸ்.ச. இளையச்சூரியன், எஸ். வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், டி.சூசை ராஜ், கா.இளவரசன், எம்.ராஜா, ஆர்.டி. ராமசாமி, தவசு மணி, அ.பிரபா, கே. கணபதி, எம். வேலுச்சாமி, இ.பி.சண்முகம்.

தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் அ.சுப்பிரமணியன், ஞான.இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாதுரை, ஜெ.அபுதாகிர், எஸ்.ஜெயராமன், ஆர். ஆர்.கே.கலைமணி, இரா. ஆனந்த், கே.எம்.சுப்பிரமணியன், த.மணிராஜன், என்.வீரய்யா, ஆர்.வி.செல்வம், கலைவாணி சுப்பிரமணியன், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் அ.முத்து, அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், ஆர்.கணேசன், பொன். ராமலிங்கம், வி.ஆர். இளையராஜா, கே.எஸ். ரவி, கே.பி.கே.டி.தங்கமணி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன் செய்துள்ளார்.

ஜி.எஸ்.டி. வரி விதிப்பு குறித்து பா.ஜ.க. உறுப்பினர் கருத்து! மறுத்து

அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் விளக்கம்!

சட்டப்பேரவையில் விவாதம்!

சென்னை, ஏப்.17-

சட்டப்பேரவையில் பேசிய பா.ஜ.க. உறுப்பினர் நயினார் நாகேந்திரன், ஜி.எஸ்.டி. வரி விதிப்பு குறித்து தெரிவித்த கூற்றை மறுத்து, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் விளக்க மளித்தார்.

அவர் குறிப்பிட்ட தாவது:

உறுப்பினர் நயினார் நாகேந்திரன் அவர்கள் தவறான கணக்கை இங்கே பதிவு செய்திருக்கிறார். அதை நான் திருத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

GSTயில் 50 சதவிகிதம், 50 சதவிகிதம் எல்லாம் கிடையாது. சில பொருட்களுக்கு SGST, IGST, சில பொருட்களுக்கு SGST, CGST. வெவ்வெறு GST வெவ்வெறு இடத்தில் பொருந்தும்.

100 சதவிகிதம் CGST யில் COLLECT செய்கிற பணம் எல்லாம் நேர்முக வரியோடு கலந்து மொத்த ஒன்றிய அரசாங்கத்தினுடைய நிதிச் சேர்க்கையில் CESS, SUR CHARGE என்று ஒரு 25 சதவிகிதத்தை கழட்டிவிட்டு பாக்கியிருப்பதில் 42 சதவிகிதத்தை மாநிலத்திற்குக் கொடுக்கிறேன் என்று சொல்லி, அதில் நான்கு சதவிகிதம் நமக்கு வருகிறதேதவிர, இவர் சொன்ன கணக்கெல்லாம் எந்தக் கணக்கிலும் சேராது.

50 PERCENTல் 29 PERCENT எல்லாம் வருவதே கிடையாது. அது முற்றிலும் தவறான கணக்கு. அந்த கணக்கை சேர்த்துக் கொள்ளக்கூடாது ஒன்று.

இரண்டாவது GST கவுன்சிலில் வாக்களிக்கிற முறையைப் பார்த்தால் அது பேருக்காக உறுப்பினராக இருக்கிறோமே தவிர, 33 சதவிகித ஓட்டு ஒன்றியத்துடனும், பாக்கி 66 சதவிகிதம் 31 மாநிலத்திற்கு ஆளுக்கு இரண்டு சதவிகிதம். அதாவது இன்றைக்குச் சொல்கிறார்கள் மக்கள் தொகை அதிகரித்திருந்தால் கூடுதல் MP இருக்க வேண்டுமென்று, ஆனால், அந்தக் கவுன்சிலில் நீங்கள் ஐந்து பைசாவுக்கு வரி செலுத்தினாலும், 5,000 கோடி செலுத்தினாலும் ஒரே அளவுக்கு ஓட்டுப் போட்டு, ஒரு மாநிலத்திற்கு ஒரு ஓட்டு என்று உலகத்தில் இல்லாத ஒரு முறையைக் கொண்டுவந்தது இந்த GST COUNCIL. அதனால் இதை வைத்து கூட்டாட்சித் தத்துவத்திற்கு சிறந்த உதாரணம் என்று பேசவே கூடாது.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

தி.மு.க. வர்த்தகர் அணி

இராணிப்பேட்டை மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

இராணிப்பேட்டை மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட பி.தியாகராஜன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக வி.விஜயகுமார் (2/376, பிள்ளையார் கோவில் தெரு பின்புறம், நவ்லாக், காரை, புளியங்கண்ணு, இராணிப்பேட்டை - 632 404) அவர்கள் இராணிப்பேட்டை மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட துணை அமைப்பாளர்களாக ஏற்கனவே நியமிக்கப்பட்ட எஸ்.சக்கரவர்த்தி, தணிகைவேல் ஆகியோரை அவர்கள் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவர்களுக்குப் பதிலாக வி.பரசுராமன் (6/12, பிள்ளையார் கோவில் தெரு இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம்) மற்றும் எம்.வி.அம்பேத்ராஜன் (16, ஈபி காலனி, வாலாஜா பேட்டை இராணிப்பேட்டை மாவட்டம் - 632 513) ஆகியோர் இராணிப்பேட்டை மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட வர்த்தகர் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் :16.-04-2025.

காசி முத்துமாணிக்கம்
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் வழிகாட்டுதலின்படி, மாநிலக் கொள்கைப் பரப்புப் துணைச் செயலாளர், தொகுதி பார்வையாளர் ச.அ.பெருநற் கிள்ளி தலைமையில், ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர்.பாரதிதாசன், பேரூர்க் கழகச் செயலாளர் எம்.ஜெய்கணேஷ் ஆகியோர் முன்னிலையில் 14.04.2025 திங்கள் கிழமை அன்று ரிஷிவந்தியம் கிழக்கு ஒன்றியம் மற்றும் மணலூர்பேட்டை பேரூர் கழகம் சார்பில் புரட்சியாளர் சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்தநாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து சமத்துவ நாள் உறுதி மொழியை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

திருத்துறைப் பூண்டி நகரக் கழக முன்னாள் செயலாளர்

வழக்கறிஞர் ஜி.தர்மராஜ் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.16-

திருத்துறைப்பூண்டி நகரக் கழகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜி.தர்மராஜன் (வயது 70) அவர்கள் உடல் நல குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்கள் சட்டக் கல்லூரியில் பயின்ற போது கழக மாணவர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்து கழகப் பணி ஆற்றியவர். திருத்துறைப்பூண்டி நகரக் கழகத்தினுடைய செயலாளராக இருந்து திறம்பட பணியாற்றியவர்.

மேலும் திருத்துறைப்பூண்டி வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும், திருவாரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் அமைப்பாளராகவும், அரசு கூடுதல் வழக்கறிஞராகப் பணியாற்றியவர்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்களுக்கு கலைச் செல்வி என்கிற மனைவியும் கார்த்திக் ராஜன் என்கிற மகனும் ராஜலட்சுமி என்கிற மகளும் உள்ளனர்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்களின் இறுதி ஊர்வலம் 17.04.2025 வியாழன் அன்று காலை 11.00 மணியளவில் திருத்துறைப்பூண்டி ஆட்டோர் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

குளித்தலை எம்.கந்தசாமி மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப். 17 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

குளித்தலை சட்டமன்றத் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.கந்தசாமி அவர்கள் 14-04-2025 அன்று மறைந்தார் என்று அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

கந்தசாமி அவர்கள் பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.கழகம் முதன்முதலாக ஆட்சியைப் பிடித்து இந்திய அரசியல் களத்தில் மிகப் பெரும் மாற்றத்துக்கு வித்திட்ட 1967-ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத்தேர்தலிலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் எதிர்கொண்டு வரலாறு காணாத வெற்றியைப் பெற்ற 1971-ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும் குளித்தலை தொகுதியில் வென்ற பெருமைக்குரியவர் ஆவார்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், குளித்தலை தொகுதி கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சியில் உள்ள தனியார் மஹாலில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் சமத்துவ நாள் விழாவை முன்னிட்டு கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள சுமார் 4107 பயனாளிகளுக்கு சுமார் 66.05 கோடி மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் நலத்துறை உள்ளிட்ட 19 துறைகளின் சார்பில் பல்வேறு விதமான நலத்திட்ட உதவிகளை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் மற்றும் கள்ளக்குறிச்சி எம்.பி., மலையரசன் மற்றும் உளுந்தூர்பேட்டை எம்.எல்.ஏ மணிகண்ணன் ஆகியோர் இணைந்து வழங்கினர். இந்நிகழ்வில் 2000க்கும் மேற்பட்ட பயனாளிகள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர்.